# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 34 December - 2021 Issue - 12**


ஆசிரியர் உரை

# தேவன் இல்லாத தேவாலயம்!

**ஆ**லயம் என்பது ஓர் அழகு தமிழ்ச்சொல். அத்தோடு ஆழமான பொருளைக் கொண்ட ஓர் ஈர்ப்புச் சொல். இவ்வுண்மையை அறிந்து உணர்ந்ததாலோ என்னவோ நம் தமிழ்ச் சான்றோர்கள், **ஆலயம் தொழுவது சாலவும் நன்று** என வெகு காலத்துக்கு முன்னமே பிரகடனப்படுத்திவிட்டனர். இதற்குக் காரணம் ஆலயமும், தொழுகையும் மானிடத்தின் இம்மையோடு மாத்திரம் இடைபடாமல், அவனுடைய மறுமையோடும் சம்பந்தப்பட்டிருப்பதாக அவர்கள் கண்டுகொண்டதுதான். ஆலயம் என்பது அனைத்து வகை நம்பிக்கையாளர்களுக்குமான ஒரு பொதுச் சொல்லாகவே மாறியுள்ளது. இதற்குக் காரணம், இவ்வார்த்தைக்கான பொருள் விளக்கங்களே. ஆம், **வழிபாட்டு இடம், கடவுள் வாசம் செய்யும் இடம், இறை உறையும் இடம்** என்று பொருள் கொடுக்கப்படுகிறது. இதினிமித்தம் எல்லோரும் ஏகமாய் சொந்தம் கொண்டாடும் ஒன்றாக மாறிவிட்டது.

இப்படி, அழகும், ஆழமும் கொண்ட ஆலயம் என்னும் சீர்மிகு வார்த்தை வேதாகமத்தின் பக்கங்களிலும் சிறப்பிடம் பெற்றுள்ளது. இச்சிறப்புக்குக் காரணம், ஆலயம் என்பது தேவனோடும், தேவக் காரியங்களோடும் பின்னிப் பிணைந்திருப்பதுதான். தேவன் மற்றும் தேவக் காரியங்கள் சம்மந்தப்பட்ட எல்லாமே சிறப்புக்குரியதே. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை. ஆகவே தான், ஏனைய மானிடருக்கு வெறும் ஆலயமாக இருப்பது, தேவ மனிதர்களுக்கு **தேவாலயமாக** மாறி உள்ளது. பழம் நழுவிப் பாலில் விழுவது போல்.

தாவீது அரசன் தன் ஆட்சிக் கட்டிலின் உச்சத்தில் இருந்த போது, நாத்தான் தீர்க்கதரிசியிடம் தேவனுக்கான ஒரு வாசஸ் தலத்தைக் கட்ட வேண்டுமென்ற தன் மனதின் விருப்பத்தை வெளிப்படுத்தினான். அப்பொழுது, நாத்தான் தன் ஆர்வக் கோளாறால் அனுமதி தந்தபோதும், கர்த்தர் தம்முடைய நீதியின் படியாகத் தடை போட்டார் (I நாளா. 22:8). அத்தோடு **நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?** என்று கேள்வி எழுப்பினார். (II சாமு 7:1-5). ஆயினும், தேவத்திட்டத்தின்படி, தாவீதின் குமாரன் சாலமோனால் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது (II நாளா 6). அதன் பிறகு நாம் இப்படியாக வாசிக்கிறோம். **கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் இருக்கிறார் என்று (சங்.11:4).** ஆக, ஆலயம் கர்த்தர் இருக்கும் இடமாக மாறிவிட்டதால், தேவ மக்களால் **தேவாலயம்** என்று மரியாதை பொங்க அழைக்கப்பட்டு, பக்திப்பூர்வமாக அணுகப்பட்டது.

பரலோகத்தின் தேவனுக்காக சாலமோன் மன்னன் ஏழு ஆண்டுகள் எடுத்துக்கொண்டு கட்டின தேவாலயம் மிகப் பிரம் மாண்ட தோற்றம் கொண்டு, மகிமை நிறைந்ததாய்க் காணப்பட்டது. அந்நாட்களில் வாழ்ந்த அனைத்துத் தரப்பு மக்களாலும் அண்ணாந்து பார்க்கப்பட்ட இந்தப் பிரம்மாண்ட தேவாலயம் இஸ்ரவேல் மக்களின் கீழ்ப்படியாமையினிமித்தமும், ஆளுகிறவர்கள் மற்றும் ஆசாரியர் களின் தேவ விரோதச் செயல்களினிமித்தமும், இன்னும் இஸ்ர வேலரின் அச்சமில்லாத துணிகரத்தினிமித்தமும் படையெடுத்து வந்த பாபிலோனியர்களால் கி.மு 587-ல் அழிக்கப்பட்டது (II ராஜா 25:9-17). பிறகு, தேவ வழிநடத்துதல்படி கோரேசு மன்னனுடைய அனுமதியும், செருபாபேலின் ஆர்வமும் ஒரு புள்ளியில் இணைந்து செயல்பட்டதால் தேவாலயம் திரும்பவும் எழும்பியது (எஸ்றா. 6:3-18). இந்த ஆலயமும் ஒரு காலகட்டத்தில், யூதர்களின் தேச விரோதச் செயல்களுக்குப் பதிலடி கொடுக்கும்படியாய் ரோமானியர்களால் சீர்குலைக்கப்பட்டு ஆலயக் காரியங்கள் தடைபட்டது. அதன்பிறகு, மகா ஏரோதுவால் மீண்டும் கட்ட ஆரம்பிக்கப்பட்டு, ஒரு 46 ஆண்டுகளாகப் பணி நீடித்து (யோவான் 2:19,20) ஒரு கட்டத்தில் நிறைவடைந்தது.

மகா ஏரோதுவால் கட்டப்பட்ட இந்தத் தேவாலயம் தான் இயேசு ஆண்டவரின் பூலோக வாழ்வோடு சம்பந்தப்பட்ட ஒன்று. இந்த ஆலயத்துக்குத்தான் இயேசு தமது **12-ம் வயதில்** நியாயப் பிரமாணக் கட்டளைகளை நிறைவேற்றச் சென்றார் (லூக். 2:42-52) இத் தேவாலயத்தில் தான் உபதேசித்தார் (யோவான் 8:20). எளிதில் புரிந்து கொள்வதற்கேதுவான உவமைகளை இங்கிருந்துதான் உதிர்த்தார் (மத்.21:23-46) அந்நாட்களில் பக்தி வேடம் போட்டுத் திரிந்த

பரிசேயர்களை இங்குதான் தோலுரித்துக் காட்டினார் (மத்.23:1-39). அது மாத்திரமல்ல, பரிசுத்த தேவாலயத்தை சந்தைக்கடையாக மாற்றின காசுக்காரரையும், வியாபாரிகளையும், விரட்டியடித்ததும் இந்த தேவாலயத்தில்தான். இன்னும் இயேசுவானவர் சிலுவையில் தொங்கி ஆவியை விட்டபோது இந்தத் தேவாலயத்துத் திரைச்சீலை தான், மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. தேவாலயம் எல்லாக் காலத்திலும் தேவனுடைய பார்வையிலும், அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவின் பார்வையிலும் கனம் பெற்றதாகவே இருந்துள்ளது. ஆகவேதான், **என் ஆலயம்** என்றும் (ஏசாயா 56:5; எரே.23:11, சக.1:16) **எனக்குப் பலியிடும் ஆலயம்** (II நாளா.7:12) என்றும் (ஆகாய் 1:9) சொந்தம் கொண்டாடிக் குறிப்பிடுகிறார். சர்வ வல்லவரின் இந்த உரிமைக் கருத்தை இயேசு ஆண்டவர் அப்படியே ஆமோதித்து என் **பிதாவின் வீடு** என்று பகிரங்கப்படுத்தினார்.

சரி, சாலமோன் கட்டின அந்தப் பிரம்மாண்ட தேவாலயப் பிரதிஷ்டையின் போது, தான் உண்டாக்கின வெண்கலப் பலிபீடத்தின் மீது முழங்கால்படியிட்டுத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரிந்து இஸ்ரவேலின் தேவனை நோக்கி ஏறெடுத்த மன்றாட்டில், இந்த தேவாலயத்திலிருந்து எவைகளெல்லாம் செய்யப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டினார். 1. விண்ணப்பித்தல் 2. பலி செலுத்துதல் 3. ஆராதித்தல் 4. அறிக்கை செய்தல் 5. மோசேயின் பிரமாணத்தின்படியான பக்திக் கடமைகளை நிறை வேற்றுதல் என்று. இவைகளையெல்லாம் பக்தி வினயத்தோடு நிறைவேற்றுவதற்கு இஸ்ரவேலர்கள் தேவாலயத்துக்குப் போக்கும் வரத்துமாயிருந்தபோது தேவன் அங்கு வாசம் செய்கிறவராகவே இருந்தார்.

ஆனால், காலப்போக்கில் இந்நோக்கங்கள் பக்தியின் பேரால் **பாழ்படுத்தப்பட்டபோது** தேவனுக்கும், தேவாலயத்துக்குமிடையில் விரிசல் உண்டாயிற்று. இது குறித்து, ஏசாயாவைக் கொண்டு தேவன் கூறுவதைப் பாருங்கள். 1. உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு 2. தகனபலிகளும், நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது. 3. காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தில் எனக்குப் பிரியமில்லை. 4. என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று நான் கேட்டேனா? 5. வீண் காணிக்கைகள் எனக்கு வேண்டாம். 6. தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பு 7. அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பும், பண்டிகைகளும் வெறுப்பு மற்றும் வருத்தம். 9. என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன் 10. ஜெபம் பண்ணினாலும் கேளேன் என்று (ஏசாயா. 1:11-15). புரிகிறதா?

இவர்களின் இந்தக் கலக மனநிலை இயேசுவின் காலத்திலும் அப்படியே நீடித்தது. எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரையும், பரிசேயரையும் பார்த்து **உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்குகிறீர்கள்** என்று சாடினார். (மத்.15:1,6). இன்னும் ஏசாயாவின் கூற்றை மேற்கோள்காட்டி, **உங்கள் ஆராதனை வீண்** என்றார் (15:9). இப்படி உள்ளம் குமுறின நிலையில் பண்டிகைக்காக எருசலேம் வந்தபோது தேவாலய நிலைமை படுமோசமாக இருந்ததைக் கண்டார். குமுறின இயேசு கொதித்தெழுந்தார். தேவாலயம் கள்ளர் குகையாக்கப்பட்டதைக் கண்டு துடித்த இயேசு, சவுக்கை உண்டுபண்ணி விரட்டியடித்துக் கயவர் கூட்டத்தை எச்சரித்தார் (யோவான் 2:13-16). இந்த இடத்தில் தான் இயேசு தேவாலயத்தைப் **பிதாவின் வீடு** என்றார்.

இப்படித் தேவனாலே **என்வீடு** என்றும், இயேசுவாலே **என் பிதாவின்வீடு** என்றும் அழைக்கப்பட்ட தேவாலயத்தை,இயேசு சிலுவைக்குப் போகும் முன், **பாரமான மனநிலையில் உங்கள் வீடு** என்றார். (மத் 23:38). அப்படியானால் இதன் பொருள் என்ன? ஒரு காலகட்டம் வரை தேவனுடைய வீடாக, பிதாவின் வீடாக இருந்த தேவாலயம் இப்பொழுது அச்சந்ததியில் வாழ்ந்த **யூதர்களுடைய வீடாகி** விட்டது. எப்படி? ஆம், தேவக்காரியங்கள் தேவச்சித்தத்தின்படி நடை பெறா மல், தேவ விரோதச் செயல்கள் மக்களுடைய மன விருப்பத்தின்படி அரங்கேறிக் கொண்டிருந்தது. ஆகையால், தேவன் அங்கிருந்து வெளியேறிவிட்டார். **தேவாலயம் தேவன் இல்லாத ஆலயமாக மாறிவிட்டது.** நம்பமுடிகிறதா ?

அருமையானவர்களே! இது இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையை அப்படியே பிரதிபலிப்பதாக இல்லையா? நெஞ்சிலே கைவைத்து மன சாட்சியோடு சொல்லுங்கள். இன்றைய சமுதாயத்தால் தேவாலயங்கள் என்று அழைக்கப்படுகிற பெரிய, பெரிய கட்டிடங்களில் தேவச்சித்தத்தின்படியாகவும், கிறிஸ்துவின் புதிய எற்பாட்டு உபதேத்தின்படியாகவும் பயபக்தியோடு காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறதா ? அதுவும், இந்த டிசம்பர் மாதத்தில் பண்டிகைக் கொண்டாட்டம் என்ற பெயரில் அரங்கேறும் அவலங்களை எண்ணிப் பாருங்கள். ஆட்டம், பாட்டம், நடிப்பு, நாடகம், வேடிக்கை, விளையாட்டு, விளம்பரம், வியாபாரம் என்று எல்லாம் படோடாபமாகவும், அமர்க்களமாகவும் நடக்கிறது என்னவோ உண்மைதான். ஆனால், தேவன் அங்கு இல்லையே. தேவன் இல்லாத தேவாலயமாக மாறிவிட்டதே!

சிலுவைக்கு முன்பாக தேவன் ஆலயக் கட்டிடங்களில் வாசம் செய்கிறார் என்று நம்பப்பட்டது போல், சிலுவைக்குப் பின்பாக இல்லை. புகழ்பெற்ற மார்சு மேடைப்பிரசங்கத்தில் தேவன் பவுல்

மூலமாக இதைத் தெளிவுபடுத்திவிட்டார். **கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் தேவன் வாசம் பண்ணுகிறதில்லை என்று** (அப் 17:24) அதற்கு மாறாக, இயேசு கிறிஸ்துவால் வாக்களித்துக்கட்டப் பட்ட **சபை தேவனுடைய வீடாக, தேவனுடைய ஆலயமாக** இருக்கிறது. (I தீமோ 3:15). இன்னும் ஒரு கிறிஸ்தவனின் **சரீரம்** தேவ ஆலயமாக உள்ளது. ( I கொரி. 3:16)

சரி, தேவாலயங்கள் எப்பொழுதெல்லாம் தேவனில்லா தேவாலயங்களாக மாறுகிறதென்று சிலவற்றைப் பார்ப்போம்.

## I **பாரம்பரியம் முக்கியத்துவம் பெறும்போது**...

தேவனில்லா தேவாலயம் நமக்குத் தரும் முதல் பாடம், பாரம்பரியப் பக்திச் செயல்பாடுகள் தேவனை வெளியேற்றி விடும் என்பது.

இயேசு ஆண்டவரால் கடுமையாகச் சாடப்பட்டவைகளில் பாரம்பரியம் முக்கியமானது. பாரம்பரியம் என்பது **முந்தின தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டுக் கைக்கொள்ளப்படுபவைகள்.** சமுதய ரீதியாகவும் இவை இருக்கும், பக்தி ரீதியாவும் இருக்கும். அப்படிப் பக்திரீதியாக இருப்பவைகளுக்கு வேதவசனங்களின் ஆதாரம் எதுவும் இருக்காது. ஆனாலும், இவைகளுக்கு வேதப்பிரமாணங்களுக்கு இணையான முக்கியத்துவம் கொடுக்கப்படும். இன்னும் சொல்லபோனால் , மோசேயின் பிரமாணங்கள் **வரிவேதம்** என்றும், முன்னோர்களின் பாரம்பரியங்கள் **ஒலிவேதம்** என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டும் கைக்கொள்ளப்பட்டது. இயேசுவின் காலத்தில் இந்நடைமுறை உச்சத்தில் இருந்தது. இயேசு ஆண்டவருக்கு இந்தப் பாரம்பரியச் செயல்பாடுகள் கடும் அதிருப்தியைத் தந்தது. இதற்கான ஒரே காரணம் பாரம்பரியங்கள் மூலம் **தேவக்கட்டளைகள் அவமதிக்கப்பட்டது தான்.** (மத்.15:6)

இங்கே, இயேசு ஆண்டவர் என்னத்தை சொல்ல வருகிறார்? பக்தியின் பேரால், தேவன்பேரால் செய்யப்படும் ஒவ்வொன்றுக்கும் வேத வசனங்களின் ஆதாரம் இல்லையென்றால் அவைகள் தேவப்பார்வையில் **மீறுதல்** என்றும் (மத் 15:3) தேவனைக் **கேவலப்படுத்தும்** செயல் என்றும் கூறுகிறார். அப்படித்தானே! அப்படியானால், பக்தியுள்ள ஒருவன் தேவனை அவமதிக்கலாமா? தேவனை அவமதித்துவிட்டு நாம் எதைச் செய்தாலும் அவைகள் அனைத்துமே வீண் (மத் 15:9).

இக்கருத்தை உள் வாங்கினவர்களாக இன்றைய கிறிஸ் தவத்தின் நிலையை நாம் நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டு

வந்து நிறுத்தி ஆய்வு செய்வோம். ஒட்டுமொத்தமாகக் கிறிஸ்தவத்தில் பக்தி என்ற பெயரால் நடக்கும் ஒவ்வொரு செயலையும் சீர்தூக்கிப் பார்ப்போம். குறிப்பாக, வருடத்தின் இறுதி மாதத்தில் பண்டிகைக் கொண்டாட்டங்கள் என்னும் பேரால் நடக்கிறவைகளைச் கவனித்துப் பாருங்கள். கிறிஸ்தவ அறத்துக்கும், கிறிஸ்துவின் போதனைகளுக்கும் எதிரானவைகள் நடக்கின்றனவா இல்லையா? பாரம்பரியம் நம்மைப் பரலோகத்துக்கு நிச்சயம் அழைத்துச் செல்லாது.

II **சத்தியத்தோடு சமரசம் செய்யும் போது**...

தேவனில்லா தேவாலயம் நமக்குத் தரும் இரண்டாம் பாடம், சத்தியத்தோடு சமரசம் செய்யும் போது தேவன் விலகி விடுவார் என்பது.

பொதுவாக, சமரசம் என்பது **நியாயத்திற்குப் புறம்பான, பகுத்தறிவுக்குச் சம்பந்தமில்லாத ஒன்றுக்கு உடன்பட்டு, அதன் மூலம் ஆபத்தான நிலைக்கு ஆளாவது.** இப்பொருளை அப்படியே ஆவிக்குரிய ரீதியில் அணுகுவோம். இயேசு ஆண்டவர் **நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்** என்று கூறினார் (யோவான் 14:6). இயேசுவானவர் நினைத்திருந்தால், **நானும் வழி** என்று பிரசங்கித்து அன்றைக்கிருந்த மதத் தலைவர்களோடு சமரசம் செய்து எதிர்ப்புகளை தவிர்த்திருக்கலாம். ஆனால், அப்படிச் செய்யவில்லை!

இன்னும், **தேவனுடைய வார்த்தைகள்** சத்தியமாயிருக்கிறது. (யோவான் 17:17). தேவ வார்த்தைகள் சுவிசேஷத்தின் சத்தியமாகவும் உள்ளது (கலாத்தியர் 2:5). இந்த சுவிசேஷம் ஒருவனைப் பரிசுத்தப் படுத்துவதோடு (யோவான் 17:19) ஆவிக்குரிய விடுதலையையும் பெற்றுத் தருகிறது ( யோவான் 8:32). இப்படி சத்தியத்தின் மூலம் விடுதலைபெற்ற முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் நினைத்திருந்தால், கிறிஸ்துவின் வார்த்தைகளோடும், உபதேசத்தோடும், சபைக்கடுத்த பக்திக் காரியங்களோடும் **சமரசம்** செய்து, உபத்திரவங்களிலிருந்து உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். ஆயிரக்கணக்கானவர்கள் இரத்த சாட்சியாய் மரித்திருக்க வேண்டிய அவசியமுமில்லை. ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

சுவிசேஷத்தின் சத்தியமானது தேவனுடைய பார்வையிலும், தேவ மனிதர்களின் பார்வையிலும் மிகவும் முக்கியமானதாகவே இருந்துள்ளது. ஆகவே தான், பவுலடியார் இளம் ஊழியனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது. சத்திய வசனத்தை **நிதானமாய் பகுத்துப் போதிக்க வேண்டும்** என்று அறிவுரை கொடுக்கிறார் (II

தீமோத். 2:15] அதாவது, அங்கே பிசகுக்கு இடமிருக்கக் கூடாது என்று. தான் போதித்தபடியே பவுல் நடந்தும் காட்டினார். எப்படி யெனில், பேதுரு அப்போஸ்தலனும், அவனோடிருந்தவர்களும் அந்தியோகியா பட்டணத்தில் சுவிசேஷத்தின் **சத்தியத்துக்கு ஏற்றபடி நடவாதத்தைக் கண்ட போது,** பேதுருவை அவர் முக முகமாய் கடிந்துள்ளார் [கலா. 2:14]. ஒரு கிறிஸ்தவன் உபதேசக் காரியங்களில் முகதாட்சணியம் பார்க்கத் தேவையில்லை

அப்படியானால், நம்முடைய வாழ்வில் சத்தியம் எந்த இடத்தில் உள்ளது. புதிய பிரமாணமாகிய கிறிஸ்துவின் பிரமாணம் கொடுக்கப்பட்ட பிறகு கிறிஸ்துவின் வார்த்தைகளை மீறி கூட்டவும், குறைக்கவும் கூடாது என்று கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளோம் [வெளி:18,19]. நம்முடைய விருப்பத்திற்கோ அல்லது பெரும்பாலோரின் விருப்பத்திற்கோ வசனங்களின் உபதேசம் மாற்றப்படுமானால், நாம் சத்தியத்தோடு சமரசம் செய்கிறோம் என்று தான் பொருள் [II யோவான் 9] அப்படிச் செய்வோமானால், கிறிஸ்துவின் உபதேசம் இல்லாத இடத்திலிருந்து பிதாவாகிய தேவனும், கிறிஸ்துவும் விலகி விடுகிறார்கள். அப்படி விலகும் போது, நம்முடைய தனிப்பட்ட வாழ்வாக இருந்தாலும், சபைவாழ்வாக இருந்தாலும், சபை கூடும் இடமாக இருந்தாலும் அவை தேவனில்லா தேவாலயமாக மாறிவிடும். எச்சரிக்கையாயிருப்போம்.

III **அனலும்**, **குளிரும் இல்லாமல் இருக்கும் போது**...

தேவனில்லா தேவாலயம் நமக்குத் தரும் இன்னொரு பாடம், பக்தி வாழ்வில் அனலும், குளிரும் இல்லாமல் போகும் போது தேவன் விலகி விடுகிறார் என்பது.

அனலும், குளிருமில்லாத நிலை என்பது **இரண்டும் கெட்டான்** நிலை. இது நமக்குப் புரியக் கூடிய மொழிநடை தான். இது தான் ஆவிக்குரிய ரீதியாக இவ்விதம் பேசப்பட்டுள்ளது. இதற்கு உதாரண மாக, வேதாகமத்தில் ஒரு சபை காணப்படுகிறது, அது லவோவதிக் கேயா சபை. வோதிக்கேயா என்பது முதல் நூற்றாண்டில் சின்ன ஆசியாவில் இருந்த ஒரு பணக்காரப் பட்டணம். அதன் வாணிபம் வளர்ந்திருந்தது. கம்பள ஆடை உற்பத்தி அபரிதமாய் இருந்தது. இன்னும் கண் நோய்க்கான மருத்துவத்தில் சிறந்து காணப்பட்டது. அதற்கு காரணம், அங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஒருவகைக் களிம்பு.

இப்பணக்கார பட்டணத்தில் பவுலடியார்தான் சபையை ஏற்படுத்தி இருக்க வேண்டுமென்று தெரிகிறது. [கொலோ 4:15,16]. இன்னும், இச்சபைக்கு அவர் ஒரு நிருபம் எழுதியிருக்கவும் வாய்ப்புண்டு. ஒரு வேளை பவுலடியார் எழுதின நிருபம் இல்லாமல் போயிருந்தாலும், இயேசு ஆண்டவர் யோவானைக் கொண்டு

எழுதின நிருபம் நமக்கு உள்ளது. ஒருவகையில் ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களுள் லவோதிக்கேயர் நிருபம்தனித்து நிற்கிறது. மற்ற ஆறு சபையார் பற்றி கொஞ்சம் பாராட்டிச் சொல்ல ஏதோ ஒன்றிரண்டு காரியங்கள் இருந்தது. ஆனால், இச்சபையை மெச்சிச் சொல்வதற்கு ஒன்றுமே கிடைக்கவில்லை.

இதற்கான பிரதான காரணம் **அனலும், குளிரும் இல்லாத நிலை.** அவர்களுடைய நிலையை நன்றாக அறிந்தபடியால் இயேசு இப்படிச் சொல்லியுள்ளார். சர்தை சபை பற்றிக் கூறும் போது, இயேசுவானவர் **நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்** என்றார் [வெளி 3:2]. ஆயினும் அவர்கள் பற்றிக் கூட சாதகமாகச் சொல்வதற்கு ஏதோ இருந்தது. [3:4]. ஆனால், லவோதிக்கேயர் பற்றிச் சொல்வதற்கு எதுவுமே இருக்கவில்லை. ஒட்டுமொத்த சபையும் **ஆவிக்குரிய ரீதியாக செத்த நிலையில்தான் இருந்துள்ளது. தலை துண்டிக்கப்பட்ட கோழி** தான் செத்ததை அறியாமல் கொஞ்ச நேரம் துள்ளவும், துடிக்கவும் செய்கிறதல்லவா அது போன்றே இவர்கள் ஆவிக்குரிய நிலையில் அவ்வப்போது சில பக்திக் கடமைகளை தங்கள் விருப்பம்போல் செய்து வந்திருக்கிறார்கள். தேவ வார்த்தைகள் பற்றிய பயம் கிஞ்த்தும் இருக்கவில்லை

ஆம், இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் போன்று, பாரம்பரியச் செயல்பாடுகளில் திளைத்து சடங்கு, சம்பிரதாயம் என்று தங்களை ஈடுபடுத்தியுள்ளார்கள். இப்படி வெதுவெதுப்பாயிருப்பவர்களை **இயேசு என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன் என்கிறார்.** [வெளி.3:16]. இதன் மூலம் இயேசுவோடு அவர்களுக்கு எவ்வித உறவும் இருக்காது என்பதைக் தெளிவுபடுத்தினார் ஆயினும், **நீ ஜாக்கிரதையாய் இருந்து மனந்திரும்பு என்று வாய்ப்புக் கொடுத்தார்** [3:19]

அருமையானவர்களே! இம்மையிலும், மறுமையிலும் தேவாதி தேவனும், இரட்சகர் இயேசுவும் நம்மோடு எப்போதும் இருக்க வேண்டுமானால், முதலாவது நாம் ஒவ்வொருவரும் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி மனந்திரும்பி கிறிஸ்தவராக மாற வேண்டும். [மத்.10:22]. பிறகு, உபதேசக் காரியங்கள் அனைத்திலும் இறுதிவரை உண்மையாய் இருக்க வேண்டும் [மத்.10:22]. லவோதிக்கேயா சபையாருக்கான எச்சரிப்பு, வருடத்தின் இறுதியிலுள்ள நம் எல்லேருக்குமான ஓர் எச்சரிக்கையாக இருக்கலாம். அப்படியானால் புதிய ஆண்டில் நாம் எப்படி இருக்கப் போகிறோம்? கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவனாக, கிறிஸ்து இல்லாத கிறிஸ்துவின் சபையாக, தேவன் இல்லாத தேவாலயமாக இருக்கப் போகிறோமா? சிந்தித்துச் செயல்படுவோம்! ஆமென்!!

**அனைவருக்கும் ஆசீர்வாதங்களும், பாதுகாப்பும் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துங்கள்!** ✝

# *வாரத்தின் முதல்நாள்*

Bro. J.C. **சோட்**

ஒவ்வொரு வாரத்திற்கும் ஏழு நாட்கள் உண்டு. இவைகளுள் ஒரு கிறிஸ்தவன் எந்த நாளில் தேவனை ஆராதிக்க வேண்டும்? ஆராதனைக்கென்று ஏதாவது ஒரு நாள் குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறதா? வேதாகமம் இதைப்பற்றி என்ன போதிக்கிறது.

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி, மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த யூதர்களுக்கான ஆராதனை நாள் சனிக்கிழமை யாயிருந்தது. மற்ற மதங்களில் வெவ்வேறு கிழமைகள் அவர்களுடைய வழிபாட்டு நாட்களாக உள்ளன. உதாரணமாக, இஸ்லாமியர் தங்கள் தொழுகையின் நாளாக வெள்ளிக்கிழமையைத் தான் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒரு கிறிஸ்தவனுக்கு எப்படி? ஒரு கிறிஸ்தவன் குறிப்பிட்ட அந்நாளில் தேவனை ஆராதிக்க வேண்டுமென்பது அவ்வளவு முக்கியமா?

கிறிஸ்தவர்களில் சிலர் யூதப் பிரமாணமாகிய ஓய்வு நாள் இன்றும் நம்மைக் கட்டுப்படுத்துகிறது என்கிறார்கள். ஆனால், இந்தப் பிரமாணம் யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. மாறாக, புறஜாதிகளுக்கல்ல (யாத். 20:117). நாம் இப்போது அதிலிருந்து முற்றுப்பெற்ற காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம் (யோவான் 1:17). இன்று நியாயப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டு நீக்கப்பட்டுவிட்டது (மத்.5:17-19). இதிலே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஓய்வு நாளை ஆசரித்தார். ஏனென்றால், அவர் வாழ்ந்ததும், மரித்ததும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ்தான். ஆனால், அவர் ஓய்வு நாளை ஆசரிக்கும்படி ஒருவருக்கும் ஒரு போதும் கட்டளையிடவில்லை ஆகையால், அவர் உயிர்த்தெழுந்த பிறகு அவருடைய சீஷர்கள் ஓய்வு நாளை ஆசரிக்கவே இல்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கூட பல முறை ஓய்வு நாளில் ஜெப ஆலயங்களுக்குச் சென்றிருக்கிறார். ஆனால், அவர் ஒரு முறை கூட ஓய்வு நாளை ஆசரிக்கவில்லை. அப்படியானால், அவர் எதற்காக இங்கே சென்றார்? தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதற்காகச் சென்றார். நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பார்க்கும் போது, பவுல், ஜெப ஆலயங்களுக்குப் போனதற்கான உண்மையான நோக்கத்தை யூதர்கள் கண்டுபிடித்த பிறகு, அவருக்கு அங்கே வரவேற்புக் கிடைக்கவில்லை.

ஆராதனை நாள் கத்தோலிக்க சபையால் மாற்றப்பட்டிருக்கலாம் என்று சொல்லுகிறவர்களும் நம் மத்தியில் இன்றும் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். கத்தோலிக்கர்கள்

தான் நமக்கு வேதாகமத்தைத் தந்ததாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால், இவை இரண்டுமே உண்மையில்லை. ஆம், கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் ஓய்வு நாளை ஆசரித்தார்கள் என்று வேதாகமம் எங்குமே போதிப்பதில்லை. ஆதித்திருச்சபை வரலாறும் இதைப் போதிக்கவில்லை. நாம் சத்திய வசனத்தை பகுத்துப் பார்க்கும் போது, மோசேயின் பிரமாணத்திற்கும், கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை கண்டு கொண்டால், மோசேயின் பிரமாணமும், அதைத் தொடர்ந்து ஓய்வு நாளும் (கொரி.(13:6-16) முற்றிலும் ஒழிக்கப்பட்ட பிறகு, கிறிஸ்துவின் பிரமாணம் உதயமாகிறது, அதில் வாரத்தின் முதல் நாள் ஆராதனை நாளாகிறது. அப்.15:23-29 வசனங்களை நாம் வாசிக்கும் போது, புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு ஓய்வு நாளை ஆசரிப்பதிலிருந்து, பரிசுத்த ஆவியானவரால் விலக்களிக்கப்பட்டதை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

நாம் வேதவாக்கியங்களுக்கு எதிரான முடிவுகளை எடுப்பதற்கு முன்பு வாரத்தின் முதல் நாள் பற்றிய சில காலங்களை உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முதலில் வாரத்தின் முதல் நாள் என்பது கிறிஸ்தவர்களுக்கான ஓய்வுநாளோ, பரிசுத்தமாக ஆசரிக்கப்பட வேண்டிய ஒரு நாளோ அல்ல. அப்படியென்றால், அது என்ன? கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதற்காகத் தேவனால் அங்கீகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிற ஓர் அற்புதமான நாள்.

வாரத்தின் முதல் நாளைப் பற்றி வேதவாக்கியங்கள் என்ன சொல்லுகிறது என்பதைத் தயவு செய்து கவனியுங்கள்:

கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் மத்(28:1-7).

- வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு குறைந்தது இரண்டு முறையாவது அவர் தம்முடைய சீஷர்களைச் சந்தித்தார் (யோவான் 20:1,19,26).
- பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அது வாரத்தின் முதல்நாளாக இருந்தது (அப்.2:1-14)
- இது நமக்கு எப்படித் தெரியும்? ஏனென்றால், எப்போதும் பெந்த காஸ்தே நாள் வாரத்தின் முதல் நாளில் தான் வரும்.
- கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வாரத்தின் முதல் நாளில் தான் முதன் முதலாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது (அப்.2).
- சபை வாரத்தின் முதல் நாள் ஸ்தாபிக்கப்பட்டது அப்.2: 38-47).
- சீஷர்கள் அப்பம் பிட்கும் படியாக வாரத்தின் முதல் நாளில் கூடினார்கள்.

- அப்.20:7 வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். ஓய்வு நாளில் வாரத்தின் முதல்நாளாக இருந்திருக்குமானால், ஓய்வு நாள் கடந்து கூடுதலான நாட்களுக்கு, சீடர்களோடு சேர்ந்து ஆராதிக்கும் படியாய் பவுல் காத்திருக்க வேண்டும்? விடை உங்களுக்கே புரிந்திருக்கும்.

- கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் எதையாகிலும் சேர்த்து வைக்கும்படியாகக் கட்டளை பெற்றிருக்கிறார்கள்.

- கொரி.16:1,2, பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு **உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக் கடவன்.** என்று கூறுகிறார். இப்போது கேள்வி என்னவென்றால், ஆராதனை நாள் ஓய்வு நாளாக இருந்திருந்தால் காணிக்கை சேகரிப்பதற்காக வாரத்தின் முதல் நாளிலே கிறிஸ்தவர்களை பவுல் ஏன் கூடிவரச் செய்ய வேண்டும்? ஓய்வுநாள் கொள்கையை பிடித்துக் கொண்டிருப்பவர்களே பவுலின் அறிவுரைகளைப் புரிந்து கொண்டீர்களா? அப்படியில்லை யென்றால் ஏன் இன்னும் புரிந்துகொள்ளவில்லை?

கிறிஸ்தவர்கள் நாளானது சமீபித்து வருகிறதைக் காண்கிறபடியால் சபை கூடிவருதலை விட்டுவிடக்சுடாது (எபி.10:25)

மறுபடியும் இது வாரத்தின் முதல் நாளாகத் தான் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான் இதை கர்த்தருடைய நாள் என்று அழைக்கிறார். (வெளி.2:10). இது ஆராதனை நாளாக இருக்கிறது. கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து (மத்.6:33). அவரை ஆராதிக்கக் கூடிவரும் நாளாக வாரத்தின் முதல் நாள் இருக்கிறது.

இன்னும் பழைய பிரமாணத்தை உறுதியாகக் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் ரோமர் 7:1-7; IIகொரி.3; எபேசியர் 2; கொலோசெயர் 2 மற்றும் எபிரெயர் 7-10 அதிகாரங்களை ஆழ்ந்து படியுங்கள். நாம் இப்போது மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர வேண்டும். ஆகையால், பிரியமானவர்களே! தேவன் தம்முடைய வார்த்தைகளில் எந்த நாளில் அவரை ஆராதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரோ அந்த நாளில், அதாவது வாரத்தின் முதல் நாளாம் ஞாயிற்றுக்கிழமையில் நாம் அவரை ஆராதித்து, உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியினாலே அவரை மகிமைப்படுத்துவோம், அப்போது தேவன் நம்மில் பிரியப்படுவார். ✝

பெண்கள் பகுதி

# பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம்

Sis. **ரேச்சல் நாயகம்**

**சென்ற மாத தொடர்ச்சி ...**

கிறிஸ்துவக்குள் அன்பான சகோதரிகளே ஸ்தோத்திரங்ளையும், வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கிறேன். பழைய ஏற்பாட்டின் மேன்மையைப்பற்றி தொடர்ந்து படித்துக் கொண்டுள்ளோம். படித்து பயன்பெறுவோம்.

V **பழைய ஏற்பாடு நிறைய தீர்க்கதரிசனங்களைக் கொண்டுள்ளது. அவைகள் யாவும் புதிய ஏற்பாட்டில் நிறைவேறிவிட்டன**

அவர்களை நோக்கி மோசேயின் நியாயப்பிமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார் (லூக்கா: 24:44).

மோசே, தீர்க்கதரிசிகள், சங்கீதங்கள் இப்படி எல்லாரும் கிறிஸ்துவைப்பற்றி பேசியிருக்கிறார்கள். நாசரேத்தூர் இயேசு என்று எங்கும் சொல்லாமல், அவருடைய பிறப்பு , அவர் போதனை, அவர் அற்புதங்கள், அவர் செய்யப் போகும் வேலைகள், அவர் பூமிக்கு வந்த நோக்கம்,அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகியவைகளைப் பற்றி, அதாவது எது நிறைவேறுகிறதோ அதைப் பற்றி பழைய ஏற்பாடு பேசுகிறது. இயேசுவைத் தவிர வேரு யாரும் இந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்ற முடியாது. இயேசு எல்லாவற்றையும் நிறைவேற்றினார்.

பழைய ஏற்பாடு முழுவதும் இயேசுவைப் பற்றிய உண்மைகள் பரவி இருக்கிறது. இவைகளைத் தேடி ஒருவர் போதிக்க முடியும். இயேசு லூக்கா :27:27 –ல் இவ்வாறு செய்திருக்கிறார், மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்ளெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். அப் : 8 ம் அதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரியடம், பிலிப்பும் இதே பாணியில்தான் பேசுகிறான். மந்திரி வாசித்துக் கொண்டிருந்த (53:7,8 ஏசாயா) பகுதியில் இருந்து நீ வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா? என்று கேட்டு தன் உரையாடலை ஆரம்பிக்கிறார்.

இயேசுவைப் பற்றிய இன்னும் சில தீர்க்கதரிசனங்களை பார்ப்போம்.

அவைகள் இயேசு பிறந்ததற்குப் பல,பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப் பட்டவைகள். அவருடைய வாழ்க்கையின் காலம் தானியேல் 2:44 லும், கன்னிகையின் வயிற்றில் பிறப்பார் என்று ஏசாயா 7:14 லும் உரைக்கப்பட்டது. மத் 1:20, மற்றும் லூக்கா 1: 35 ல் அவை நிறைவேறியது. பெத்லகேமிலே பிறப்பார் என்று மீகா 5:2 –ல் சொன்ன தீர்க்கதரினம் மத் 2:1; மற்றும் லூக் : 2:1 –7 –ல் நிறைவேறியது. இயேசுவின் சரீரத் தோற்றம் பற்றி ஏசாயா. 53:2–ல் கூறப்பட்டுள்ளது.3ம் வசனத்தில் அவர் எவ்வாறு இகழப்படுவார் என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஏசாயா 6:9,10 –ல் இயேசுவின் போதனைகளுக்கு வரவேற்பிருக்காது என்று தீர்க்க தரிசனம் மத் : 13:14,15–ல் நிறைவேறியது. சகரியா 9:9–ல் கூறப்பட்ட இயேசுவின் எருசலேம் நுழைவு [யோவான் 12:12–15] –ல் நிறைவேற்றியுள்ளது. சங்கீதம் 22:16–18– ல் அவருடைய ஆடையை சீட்டுப்போட்டார்கள் என்ற தீர்க்கதரிசனம் மத் :27:35–ல் நிறைவேறியது. யூதாஸ் 30 வெள்ளிக் காசுக்கு காட்டிக் கொடுக்கப்பட்டது சகரியா 11:12 –ன் தீர்க்கதரிசனம் மத் 26:15–ல் நிறைவேறியது. இயேசு கிறிஸ்துவின் ஊழியக் காரியங்கள் யாவும் ஏசாயா :61:1,2 ல் முன்னுரைக்கபட்டது. புதிய ஏற்பாட்டில் நிறை வேறியது [லூக்கா 4:17–21]. இயேசுவின் மரணம், மற்றும் அவருடைய கல்லறையைப் பற்றிய தீர்க்கதரிசனம் லூக்கா 24:1–7 ல் சரீரத்தின் மாபெரும் உண்மையாக நிறைவேறி யிருக்கிறது. அப் : 1:9 –ல் பதிவாகியுள்ள இயேசுவின் பரமேறுதல் தானி 7:13 –ல் சொல்லப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாடு முழுவதும் இப்படியாக வர இருக்கும் மேசியாவைப் பற்றி திட்டமாகக் கூறுகிறது. ஒரு கிறிஸ்தவனுக்கு இவைகளைப் பற்றிய உண்மை தெரிந்திருப்பது அவசியம். [கலா : 3:24,25] ல் பாக்கிறபடி, இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே

VI **பழைய ஏற்பாடு ஒருவனை ஞானமுள்ளவனாக்குகிறது :**

நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு, அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக் கிறதுமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறு வயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் [II தீமோ : 3: 14,15]

இந்த வேதப்பகுதி , தீமோத்தேயு சிறுவயதிலிருந்து பரிசுத்த வேத எழுத்துக்களை கற்றறிந்திருக்கிறான் என்று விளக்குகிறது.அவன் இளம்பிராயத்தில் இருந்தபோது இருந்த ஒரே பரிசுத்த வசனங்கள் பழைய ஏற்பாடு மட்டுதான். இந்த பரிசுத்த எழுத்துக்களை தீமோத்தேயுவுக்கு கற்றுக் கொடுத்தஅவனுடைய தாயாகிய

ஜனிக்கேயாரும், பாட்டியாகிய லோவிசாளும்[ I தீமோ : 1:5]. எனவேதான். அப்போஸ்தலன், பவுல் இரட்சிப்புப்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க என்று கூறுகிறார். நன்றாக கவனிக்க வேண்டும், பழைய ஏற்பாடு தீமோத்தேயுபை இரட்சிக்கிறது என்று கூறவில்லை. புதிய ஏற்பாடு மட்டும்தான் இரட்சிக்க முடியும் [யாக் : 1:21 ; அய் 20 : 32]. இவ்வளவு நேரம் நாம் கற்றுக் கொண்டதிலிருந்து பார்த்தால் பழைய ஏற்பாடு இரட் சிப்வை நோக்கி வழிநடத்துகிறது.

பழைய ஏற்பாட்டில் நிறைய பாடங்கள் ஒருவனை ஞானமுள்ளவனாக வளரச் செய்து கிறிஸ்து இயேசுவுக்குள்தான் இரட்சிப்பு இருக்கிறது என்பதை கண்டுபிடிக்க உதவுகிறது.

- ஒருவர் கவனிக்கிறவனாக, அதாவது கேட்கிறவனாக இருக்கவேண்டும் என்பதின் அவசியத்தை போதிக் கிறது.[உபாகமம் 6: 4–9]
- தேவனுக்கு முன்பாக ஒருவன் தன்னைத் தாழ்த்த வேண்டும் என்பதை போதிக்கிறது.[சங்கீதம் :51]
- பாவத்திலிருந்து உண்மையாக ஒருவன் மனந்திரும்ப வேண்டும் என்பதை போதிக்கிறது.[யோனா :3]
- வேதாகமத்தை சரியானமுறையில் பயன்படுத்த வேண்டும் என்பதின் அவசியத்தை போதிக்கிறது.[உபாகமம் :4:2]
- தீமோத்தேயுவுக்கு பழைய ஏற்பாடு இரட்சிப்பை கொடுக்க முடியாமல் இருந்திருந்தாலும் இயேசு கிறிஸ்துவிடம் மிகத் தெளிவாக வழிநடத்தியது.[கலா:3:19–27].

அருமையானவர்களே, கடந்த மூன்று மாதங்களாக பழைய ஏற்றபாட்டின் முக்கியத்துவம் பற்றிப் பார்த்தோம். எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும் இன்றைக்கு அது சட்டப் புத்தகம் அல்ல. புதிய ஏற்பாடு அவைகளையெல்லாம் நிறைவேற்றின ஒன்றாக, புதிய உடன்படிக்கையாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டை நமக்கு கொடுத்தவர் இயேசு கிறிஸ்து தான், மோசே தீர்க்கதரிசி அல்ல.

ஆக, புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரே சபையான கிறிஸ்துவின் சபையைக் கண்டுபிடிப்போம். கிறிஸ்து தன் இன்னுயிரைக் கொடுத்து சம்பாதித்த சபை இது மட்டுமே . புதிய ஏற்பாட்டில் இயேசு சொன்ன வசனங்கள்தான் நம்மை நியாயசுந்தீர்க்கப் போகிறது.[யோவான் :12:48] சரியான புரிந்துகொள்ளுதலோடு நம் கிறிஸ்தவ வாழ்க்கை இருக்க வரும் புதிய ஆண்டில் முயற்சி எடுப்போம். ஆமென் ஆமென்.

**அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !!!**

✝

வாலிபர் பகுதி

# இந்த வருடமும் இருக்கட்டும்

Dr. **ஏபில் நாயகம்**

பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினாலே நாம் இந்த வருடத்தின் கடைசி மாதத்தை கண்டிருக்கிறோம். அவருக்குச் சித்தமானால். நாம் ஒரு புதிய வருடத்தை காண இருக்கிறோம். கோவிட் – 19 ன் பாதிப்புக் களிலிருந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக மீள ஆரம்பித்துளளோம். 2020 – ம் ஆண்டும் சரி, 2021–ம் ஆண்டும் சரி, மிகவும் சவாலான ஆண்டுகளாகவே இருந்தன. ஆனாலும் சர்வ வல்லவருடைய கிருபை, இரக்கம், தயவு ஆகிய இவைகளால் நாம் இதுகாறும் காக்கப்பட்டு வருகிறோம். பொதுவாக, ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நாம் கடந்து வந்த நாட்களைப் பின்னிட்டுப் பார்த்து, நாம் களைய வேண்டிய காரியங்களைக் களைந்து, கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் எவை என்று தீர்மானிக்க முற்படுவது வழக்கம். அது நம்முடைய வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். இப்பொழுதும் பிரியமானவர்களே, ஒரு புதிய ஆண்டின் விளிம்பில் இருக்கும் நாம் கடந்து வந்த நாட்களை திரும்பிப் பார்ப்பதோடு நின்று விடாமல், வருகின்ற ஒரு ஆண்டு, ஒரு புதிய வாய்ப்பாக இருக்கிறது என்றும், ஏதோ ஒரு நோக்கத்தோடு எனக்கு அது கொடுக்கப்படுகிறது என்ற கண்ணோட்டத்தோடும் இதை அணுகுவது சாலசிறந்ததாக இருக்கும்.

லூக்கா 13 ஆம் அதிகாரம், 6–9ம் வசனங்களில் ஆண்ட வராகிய இயேசு ஒரு உவமையை சொல்லுகிறார். (6) ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை (7). அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்டிறயுங் காண வில்லை. இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது. என்றான் (8) அதற்கு அவன்; ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி எருப்போடுவேன் (9). கனிகொடுத்தல் சரி, கொடா விட்டால், இனிமேல் இதை வெட்டிப் போடலாம் என்று சொன்னான் என்றான். புதிய வருடத்தை எதிர்நோக்கியிருக்கும் நமக்கு இந்த உவமையிலிருந்து தேவையான பாடங்கள் அடங்கியிருக்கிறது.

அத்திமரங்கள் பொதுவாக காடுகளிலும், வழியருகேயும் இருக்கும். ஆனால் இந்த உவமையில் சொல்லப்பட்டிருக்கும் அத்திமரமானது திராட்சை தோட்டத்தில் இருந்தது என்று வாசிக்கிறோம். காடுகளில் இருக்க வேண்டிய அத்திமரம் திராட்சை தோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வந்தது. அப்பொழுது அந்த தோட்டத்து எஜமான் அதிலே கனியைத் தேடவந்த பொழுது, அதில் கனியைக் காணாமல் ஏமாற்றமடைந்தார். ஏமாற்றம் அடைந்ததில் ஒரு நியாயம் இருக்கவே செய்கிறது. ஏனென்றால், திராட்சை தோட்டத்தில் வளர்க்கப்பட்டு வருகிற அத்திமரமாகையால் தோட்டத்து எஜமானுக்கு எதிர்பார்ப்பு இருந்தது நியாயமே!

தோட்டத்து எஜமான் ஏமாற்றம் அடைந்தபடியினாலே தோட்டக் காரனை அழைத்து அந்த கனி கெடாத அத்திமரத்தை வெட்டிப்போடச் சொல்கிறார். ஏனென்றால், கனியும் கொடுக்கவில்லை. நிலத்தையும் அது கொடுக்கிறது என்று இந்த அத்திமரத்தினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை என்று முடிவு செய்த எஜமான் அதை வெட்டிப் போடும்படி சொன்னார்.

ஆனால், அந்தத் தோட்டக்காரனோ அந்த கனிகொடாத மரத்திற்காக பரிதபித்து, தோட்டத்து எஜமானிடத்தில் இன்னும் ஒரு வருடம் இருக்கட்டும் என்று கேட்கிறான். அது மட்டுமல்ல தன் முயற்சியினாலே, அதை விஷேசமாய் கவனித்து, கூடுதல் பராமரிப்புடன் வளர்க்கிறேன் என்றும் தோட்டத்து எஜமானிடத்தில் பரிந்து பேசுகிறார். அப்படி அதைச் சுற்றிலும் கொத்தி எருப்போட்டும் அது கனி கொடுக்கவில்லை என்றால் பின்பு அதை வெட்டிப் போடலாம் என்று தோட்டத்து எஜமானிடத்தில் தோட்டக் காரன் சொல்கிறார்.

பிரியமானவர்களே! இந்த உவமையில் உள்ள தோட்டத்து எஜமான் நம் தேவன். தோட்டக்காரன் இயேசுகிறிஸ்து. திராட்சைத் தோட்டம் சபை. நாம்தான் அந்த அத்திமரம். நாம் அனைவரும் வழியருகேயும் காடுகளிலேயும் இருக்க வேண்டிய அத்திமரம். ஆனால், பிதா தம் சித்தத்தின்படி நம்மை ஒரு விஷேசமான உயர்வான இடமாகிய சபையென்னும் திராட்சைத் தோட்டத்தில் வைத்திருக்கிறார். கொலோ 1:13 ல் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத் திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் என்று வாசிக்கிறோம். ஆக, கிறிஸ்தவர்கள் வரும் திராட்சை தோட்டத்தில் நாட்டப்பட்ட அத்திமரமாக இருக்கிறோம். சிறப்பான ஒரு இடத்தில் இப்படி ஓர் உன்னதமான அந்தஸ்தை கொடுத்த நம் தேவன் நம்மிடம் கனிகளை எதிர்ப்பார்க்கிறார். ரோமர் 7:4 ல்

அப்படிப்போல என் சகோதரரே நீங்கள் மரித்தோரில் இருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனி கொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள் என்று வாசிக்கிறோம். யோவான் 15:8 ல் **நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார் எனக்கும் சீஷராயிருப்பீர்கள்** என்று தோட்டக்காரராகிய இயேசு கூறுகிறார்.எனவே திராட்சை தோட்டத்தில் நாட்டப்பட்ட அத்திமரங்களாகிய நாம் கனி கொடுக்கிறவர்களாக இருக்கிறோமா? சிந்திப்போம்.

ஒருவேளை நாம், போதுமான அளவிற்கு கனிகொடாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தால் தோட்டக்காரரகிய இயேசு நமக்கு உதவி செய்கிறார் என்று இந்த உவமை சொல்கிறது. நிச்சயமாக இது ஆறுதலான ஒரு செய்தியாக இது உள்ளது. எப்படி அந்த தோட்டக்காரன் இன்னும் ஒரு வருஷம் இருக்கட்டும் என்று கனிகொடாத மரத்திற்காக எஜமானிடம் மன்றாடுகிறானோ, அதைப்போல ஒருவேளை இயேசுவும் நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கலாம். நமக்கு கொடுக்கப்பட போகும் புதிய வருடம், நாம் கனி கொடுக்க ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற நோக்கத்தோடு கொடுக்கப்படலாம். எபிரெயர் 7:25 ல் நமக்காக இயேசு வேண்டுதல் செய்கிறார் என்றும் I யோவான் 2:1ல் நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்றும் வாசிக்கிறோம். அவருடைய பங்கிற்கு அவர் நமக்காக உதவி செய்கிறார். நம்முடைய பங்கிற்கு அதை புரிந்து கொண்டு செயல்படவும், கனி கொடுக்கவும் நாம் ஆயத்தமா? சிந்திப்போம்!

**புத்தாண்டு வாழ்த்துக்கள்** ✝

## மற்றவர்களுக்காக

*ஆறுகள் அவைகளின் தண்ணீரைக் குடிப்பதில்லை; மரங்கள் அவைகளின் கனியைப் புசிப்பதில்லை; சூரியன் ஒருபோதும் தன் மீது உதிப்பதில்லை; மலர்களும் தங்களுக்காக வாசம் வீசுவதில்லை. மற்றவர்களுக்காக வாழ்வது இயற்கையின் நியதியாயிருக்கிறது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், நாம் மகிழ்ச்சியாக இருந்தால் வாழ்க்கை நன்றாக இருக்கும், ஆனால் நம்மால் மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் வாழ்க்கை சிறந்ததாக இருக்கும்.*

சிறுவர் பகுதி

# தீமையிலிருந்து விலகுதல் II

Dr. பிரெய்சி

**ஹா**ய் குட்டீஸ், நீங்களெல்லாரும் பள்ளிக்குச் செல்வதாலும், நேரத்தை கண்டு பிடித்து தேவனுடைய வார்த்தையை வாசிப்பதினாலும் மகிழ்ச்சியாருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். கடந்த மாதம் தானியேல் எப்படி தீமையிலிருந்து விலகும்படி தன் இருதத்தில் தீர்மானம் பண்ணினார் என்பதைப்பற்றி நாம் விவாதித்தோம்.

இந்த மாதம் தங்கள் ஜீவன் நஷ்டடப்பட்டாலும் பரவாயில்லை அதாவது, தங்கள் உயிரையும் துச்சமாக எண்ணி தேவனுக்குப் பயந்து, தீமையிலிருந்து விலகிய மூன்று மனிதர்கள் பற்றி உங்களுக்கு நான் சொல்லப்போகிறேன். சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்கள் பாபிலோன் ராஜாவால் அச்சுறுத்தப்பட்ட போதிலும் கூட தேவனுடைய பார்வையில் எது சரியானதோ அதைத்தான் அச்சுறுத்தப்பட்ட போதிலும் கூட தேவனுடைய பார்வையில் எது சரியானதோ அதைத்தான் செய்தார்கள். இந்த மாதம் அவர்களைப் பற்றித்தான் நாம் பார்க்கப் போகிறோம்.

தானியேல் 3:1–7 வசனங்களில் இஸ்ரவேலர்களை சிறை பிடித்த பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு பெரிய பொற்சிலையை உண்டு பண்ணி, எக்காளம், நாதசுரம், கின்னரம் வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீத வாத்தியங்கள் வாசிக்கப்படும் போது எல்லாரும் தாழ விழுந்து அச்சிலையைப் பணிந்து கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டான். மேலும் ராஜா அப்படி அச்சிலையை பணிந்து கொள்ளாதவர்கள் எரிகிற அக்கினிச் சூளையிலே போடப்படுவார்கள் என்றும் கட்டளை யிட்டான்

அருமையான சிறுபிள்ளைகளே! நாம் யாருக்கு பயப்படு கிறோமோ அல்லது யாரை நேசிக்கிறோமா அந்த நபர் நாம் தவறு செய்யும்படி கட்டளையிட்டால் அவர்களக்குப் பயந்து அல்லது அவர்களுடைய நட்பை இழந்துவிடுவோமோ என்று பயந்து தவறு செய்து விடுவோம். ஆனால், இந்த அதிகாரத்தில் எந்த ராஜாவின் கட்டளைக்குளூ; கீழ்ப்படியாமல் தீமை செய்வதில்லை என்ற தீர்மானம் எடுத்தார்கள். நாம் வேறு தெய்வங்களை ஆராதிக்கக் கூடாது என்று தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். இந்த மூவரும் தேவனுக்குப் பயந்தபடியால் தான் அருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும் **தேவன் தங்களை தப்புவிப்பார்** என்று விசுவாசித்தார்கள். அவர்கள் தேவன் தங்களை தப்புவிக்காவிட்டாலும் கூட தீமை செய்வதில்லை என்று தீர்மானித்தார்கள்.

அருமையான பிள்ளைகளே! அவர்கள் நிச்சயமாகவே அந்த அக்கினிச்சூளையிலிருந்து தேவனால் தப்புவிக்கப்பட்டார்கள். அவர்களைப் போல நாமும் தேவனுக்குப் பயந்து தீமையிலிருந்து விலக வேண்டும். இந்த மூன்றுபேரும் தேவன் தங்களைத் தப்புவிக்காவிட்டால் மரிப்பதற்கும் ஆயத்தமாக இருந்தார்கள். நீங்களும் அவர்களைப் போல் தீமையை விட்டு எல்லாச் சூழ்நிலையிலும், விலகுவீர்கள் என்று நம்புகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**மிகுந்த அன்புடன்**
**ப்ரெய்சி அக்கா.**

---

## முடியாது

* போராட்டமில்லா வாழ்வில் மாற்றங்களை காண முடியாது [யோபு 14:14].
* உபத்திரவமில்லா வாழ்வில் எதுவும் உருவாக முடியாது [ஏசாயா 48:10]
* சோதனையற்ற வாழ்வில் எவரும் சாதிக்க முடியாது [யாக்கோபு 1:12]
* சிட்சைக்கு நில்லாத எவரும் தேவனுக்கு பிள்ளையாக முடியாது [எபிரெயர் 12:5].
* பாடுகளின் வழி செல்லாமல் பரலோகம் போக முடியாது [I பேதுரு 4:13].

# சகோதர சிநேகம் நிலைத்திருக்க

Bro. **பாண்டியன்**

**யோ**சனையில் பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிற நம் பிதாவாகிய தேவன் புது உடன்படிக்கையைப் பற்றிய தீர்க்கதரிசனத்தில் நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்றார். ஏனெனில், அவர்களுடைய இருதயத்தில் பிரமாணம் எழுதப்பட்டு அனைவரும் அந்த ஒரே தேவனுக்குச் சொந்தமான ஜனங்களாய் இருப்பார்கள் (எரேமி 31: 33, எபி8:10) அதனால் சபைமக்கள் ஒற்றுமையாக இருப்பது சாத்தியமாகிறது. உலகத்தில் எத்தனை மன்றங்கள், சங்கங்கள் தோன்றி மறைந்தாலும் கிறிஸ்தவம் நிலைத்திருப்பதற்கு இதுவே காரணமாகும். மேலும், சபையாருக்கு தேவன் தம் தீர்க்கதரிசனத்தில் அவர்கள் என் கட்டளைப்படி செய்ய ஏக இருதயத்தையும், புதிய ஆவியையும் சதையான இருதயத்தையும் அருளுவேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று முன்னறிவித்து இருக்கிறார்(எசேக் 11:19,20) புதிய ஏற்பாட்டில் பேதுரு இதைப்பற்றிக் கூறும்போது நீங்கள் இப்பொழுது தேவனுடைய ஜனங்களும் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி மற்றும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் என்று கூறியுள்ளார் ( I பேது 2:9,10).

ஆகவே, தேவனுக்குச் சொந்தமான ஜனம் ஒற்றுமையாய் இருக்க வேண்டியதின் அவசியத்தை இனி காண்போம். கிறிஸ்து இதைக் குறித்து பேசும் போது நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்ற கட்டளையைக் கொடுத்து அதன் மூலமாத்தான் உலகம் கிறிஸ்தவர்களை அடையாளம் காணும் எனறார் (யோவான் 13:34,35) அது மாத்திரமல்ல, அவரைப் பின்பற்றுபவர்கள் ஒன்றாயிருக்க பிதாவிடம் கருத்தாக ஜெபித்தார்(யோவா 17:21-23) சபைக்கு மூலக் காரணமாக இருக்கும் அப்போஸ்தலர் உபதேசத்திலும், சகோதரரே நீங்கள் எல்லாரும் ஒரே காரியத் தைப்பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய் இருக்க இயேசுவின் நாமத்தில் புத்தி சொல்கிறது (I கொரி 1:10) ஆக, சபையாரின் ஐக்கியம் மற்றவர் முன்பாக கவனிக்கப்படுகிறது என்பதை நாம் அறிந்து ஆண்டவருடைய நாமம் தூஷிக்கப்படாதபடிக்கு ஒற்றுமையைக் காக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது .

**சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது** (எபி 13:1) என்கிற ஒற்றைவரி வசனமே இக்கட்டுரையின் ஆதாரம். இதற்கு முதலாவதாக நமக்குத்தேவைப்படுவது **மன்னிக்கிற** பண்பாகும் மனந்திரும்புகிறவர்களை மன்னிக்கிறதில் நம் தேவன் தயைபெருத்தவராய் இருப்பதால் ( ஏசா 55:7) நாமும் அவரைப்போல பூரணசற் குணராயிருக்க இயேசு சொல்கிறார்.

பொதுவாக, நாம் சிறுபிள்ளைகளுக்குப் பெரிய தலைவர்கள், விஞ்ஞானிகள் போன்றவர்களை முன் உதாரணம் காட்டுவோம். ஆனால், நம் எஜமானர் இயேசு பெரியவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி சிறுபிள்ளைகள் போலாகாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்கிறார். பாதாளத்தின் வாசல்கள் அவர் கட்டிய சபையை மேற்கொள்ளாது என்கிற வாக்குத்தத்தமே இந்த சகோதர சிநேகத்தில்தான் உள்ளது. அதனால் தான், நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது என்று பார்க்கிறோம் [I கொரி 10:16]

மன்னிக்கிற குணத்தை வலியுறுத்திய நமதாண்டவர், நீங்கள் மன்னியாவிட்டால் உங்கள் பிதாவும் உங்களை மன்னிக்க மாட்டார் என்று எச்சரிக்கை விடுத்தார் [மத் 18:35, மாற்கு 11:25] பேதுரு என் சகோதரனை எத்தனைதரம் மன்னிப்பது? என்று கேட்ட போது ஆண்டவர் ஏழு எழுபது தரம் என்ற ஆச்சரியமான பதிலை அளித்தார் தொடர்ந்து பவுல் அதைப்பற்றி கூறும் போது, ஒருவருக் கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக் கொருவர் மன்னியுங்கள் [எபே 4:32] என்கிறார். எனவே, சகோதர சிநேகம் கெடுவதற்கு மன்னியாத இருதயக்கடினமே முக்கியக் காரணம் என்பதை ஆவியானவர் நமக்குச் சுட்டிக் காண்பிக்கிறார்.

இரண்டாவதாக, சகோதர ஐக்கியம் நிலைத்திருக்க நமக்கு தாழ்மை குணம் மிக அவசியமாகிறது. ஈகோ என்று சொல்லப்படும் பெருமை எண்ணங்கள் நம் சகோதர சிநேகத்தை குலைத்துவிடும், கிறிஸ்து உபதேசத்தில் தாழ்மை முக்கிய பங்குவகிக்கிறது சாந்தம், மனத்தாழ்மையை தம்மிடம் கற்றுக்கொள்ள இயேசு அனைவரையும் அழைக்கிறார். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்பது எழுதப்பட்ட சட்டமாகும் சிநேகிதரின் அழைப்பின் பேரில் ஒரு விசேஷத்திற்கு போகும் போது தாழ்ந்த இடத்தில் உட்காரச் சொன்ன இயேசுவானவர் தம்சீஷர்களின் கால்களைக் கழுவி அவர்களுடைய பெருமையான எண்ணங்களை அழித்துத் தம்மையே ஒரு முன்உதாரணமாகக் காண்பித்தார். இதைத்தான் அப்போஸ்தலர் உபதேசமும், நீங்கள் ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையாக எண்ணக்கடவீர்கள் [பிரி 2:3] என்று எச்சரிக்கின்றது.

மூன்றாவதாக, சகோதர சிநேகம் நிலைத்திருக்க அன்பாயிருப்பது என்று வேதம் வலியுறுத்துகிறது. சபை ஆரம்பிக்கும் முன்பு தம் சீஷர்களிடத்தில் இயேசு சொன்ன,நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை பிற்பாடு சபைக்கு அறிவுரைச் சொன்ன மூப்பனாகிய யோவான்,

ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன் என்று குறிப்பிட்டார். ஆனால், அதைத் தொடர்ந்து யோவான் எழுதும் போது ஒரு புதியகற்பனையையும் நான் எழுதுகிறேன் என்றுச்சொல்லி, ஒளியில் இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். என்கிறார் (I யோவா 2:8,9) அன்பில் ஆரம்பம் முடிவு உண்டு! நமதாண்டவர் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை ஒரேவிதமாகத்தான் அன்பு கூர்ந்தார் (யோவா 13:1) என்பது கவனிக்கத்தக்கது. நாமும் நம்சபையாராகிய சகோதரரிடம் அன்பு கூரக் கடனாளியாய் இருக்கிறோம்.(I யோவா 4:11).

பவுல் அப்போஸ்தலன் சகோதர அன்புக்காக ஒரு அதிகாரத்தையே ( I கொரி 13) ஒதுக்கியுள்ளதை ஆராய்ந்து பார்ப்போம். தன் சகோதரனைப் பொறாமையினால் கொன்ற காயீன் பொல்லாங்கனால் உண்டாயிருந்தான் (I யோவ 3:12) நாமோ தேவனால் உண்டாயிருக்கறோம் (I யோவ 5:19) கொரிந்து சபையை பற்றி பவுல், விரோதங்கள், கோபங்கள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல், கோள்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள் ஆகிய இவைகள் உண்டாயிருக்குமோ என்று பயந்திருந்தார். தம் சபைகளை பார்த்து அவவிதமாய் பயம் உண்டாகாமல் அவர் சந்தோஷத்தை நிறைவாக்குவோம். ( 2 கொரி 12: 20–பிலி 2:2) தேவக்கிருபையும், வழி நடத்துதலும் நம் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்.

✞

***பரிசுத்தம் எங்கெல்லாம் காணப்பட வேண்டும்?***

| | |
|---|---|
| ***இருதயத்தில்*** | ***மத்தேயு 5:8*** |
| ***கைகளில்*** | ***சங்கீதம் 24:4*** |
| ***வழிகளில்*** | ***சங்கீதம் 11:9*** |
| ***வார்த்தையில்*** | ***யோபு 11:4*** |
| ***மனசாட்சியில்*** | ***I தீமோத்தேயு 3:9*** |

# தன்னைத்தானே நிதானித்துப் பார்த்தல்

Bro. K.M பிலிப்

**பு**திய ஆண்டைநோக்கி ஆவலோடு காத்திருக்கிற உங்கள் யாவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். மற்ற உயிரினசங்களிலிருந்து மனித இனத்தை வேறுபடுத்திக் காட்டும் பண்புகளில் ஒன்று. தன்னைத்தானே நிதானித்துப் பார்த்தால். நிதானம் என்பது உணர்தல், சேர்த்துப் பார்த்தல், புரிந்து கொள்ளுதல் என்பவைகளின் அடக்கம். இது மனித இனத்தின் சிறந்த பண்புகளில் ஒன்றாகும். நிதானித்துப் பார்த்தல் என்பது அவரவர் இருதயத்தைப் பொறுத்தது. இந்த வாய்ப்பு பிதாவாகிய தேவனுக்கும், சம்மந்தப்பட்ட மனிதனுக்கு மட்டுமே உண்டு. சொந்த தாய்க்குக்கூட பிள்ளைகளின் முழு இருதயத்தை அறிந்து கொள்ள இயலாது. மேலும், நிதானித்து அறிவது என்பதே மனிதனை சிறந்த பண்புள்ள மனிதனாக மாற்றும். இதைத்தான் வாரத்தின் முதல் நாளில் கூடி வரும் ஒரு கிறிஸ்தவன் பெற்றிருக்கிறான். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் முன் எந்த மனுஷனும் தன்னைத்ததானே **சோதித்தறிந்து** என்பதை கட்டளையாகப் பெற்றிருக்கிறோம். இதன் கருத்து நம்மை தேவனோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள தகுதிப்படுத்த வேண்டும் என்பதாகும. மட்டுமல்லாமல் நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும் என்றும் (29)எச்சரிக்கப்படுகிறோம்.

இதைத்தான் உணர்வற்ற இஸ்ரவேலர்களை நோக்கி தேவன் சொல்வதைக் கவனியுங்கள். (உபா.32) மழையானது இளம் பயிரின்மேல் பொழிவது போல என் உபதேசம் பொழியும். பனித்துளிகள் புல்லின் மேல் இறங்குவது போல்என் வசனம் இறங்கும். (உபா 32:2). என்று இஸ்ரவேலர்களுக்கு நற்போதனைகளை அனுதினமும் தேவன் தரத் தவறியது இல்லை. மேலும், பாழான நிலத்திலும், ஊளையிடுதலில் உள்ள வெறுமையான அவாந்திர வெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார், அவனை நடத்தினார். அவனை உணர்த்தினார். தமது கண்மணிப்போல காத்தருளினார் (33:10) என்றும் பார்க்கிறோம். இவ்வளவும் திருப்தியாய் அனுபவித்த இஸ்ரவேலர்கள் தேவனை திருப்திப்படுத்தவில்லை. அந்நிய தேவர்களால் அவர்களுக்கு எரிச்சலை மூட்டினார்கள். அருவருப்பானவைகளினால் அவரைக் கோபப்படுத்தினார்கள் (32:16)

மேலும், உன்னை ஜெநிப்பித்த கன்மலையை நீ நினையாமல் போனாய்; உன்னைப் பெற்ற தேவனை மறந்தாய் (32:18). என்றும், அவர்கள் யோசனை கெட்ட ஜாதி ;அவர்களுக்கு உணர்வில்லை(28)

என்றும் உணர்த்திக் காட்டினார். எனவே, அவர்கள் ஞானமடைந்து, இதை உணர்ந்து தங்கள் முடிவை சிந்தித்தால் நலமாயிருக்கும் என்று (29). எச்சரித்தார். இந்த எச்சரிப்பு ஆவிக்குரிய இஸ்ர வேலர்களாகிய நமக்கும் பொருந்தும். தயவு செய்து நிதானித்துப் பாருங்கள். எச்சரிப்பால் நிதானித்துப் பார்த்த இஸ்ரவேலர்கள் மனந்திரும்பி மோசேவுக்கும், யோசுவவுக்கும் தேவனுடைய வார்த்தையின்படி கீழ்ப்படிந்ததால் பாலும் தேனும் ஓடும் செழிப்பான கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள். பிரியமான தேவ ஜனமே! வசனத்தின் துணை கொண்டு தேவனைப் பிரியப்படுத்தி வாழ நம்மை நாமே நிதானிப்போம், செழிப்பாய் வாழ்வோம்.

தாவீதின் மகன் சாலோமோனின் வாழ்க்கையிலிருந்து ஒரு பாடத்தை படிப்போம். I ராஜா இரா.3: மிக இளம் வயதில் எதிர்பாராத சூழ்நிலையில் எதிர்ப்புக்களின் மத்தியில் சாலமோன் ராஜாவானான். இவன் தான் ராஜாவானது குறித்து பெருமைப் படாமல் தன் நிலை உணர்ந்து நிதானித்துப் பார்த்தான். நானோவென்றால் போக்குவரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்..... அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளுவீர் என்று (1 இரா 3:7,9) பிதாவினிடத்தில் தன்னைத் தாழ்த்தி விண்ணப்பித்தான். ஞானமாய் செய்த இச்செயல் குறித்து **இந்த காரியத்தை கேட்டது ஆண்டவரின் பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது** என்று வேதம் சொல்லுகிறது (10). ஆம், தாழ்மையுள்ளவர்களுக்கோ கர்த்தர் கிருபையளிக்கிறார். (நீதி3:34). தேவன் சாலமோனை ஆசீர்வதித்து உன் வார்த்தைகளின்படி செய்தேன். ஞானமும், உணர்வுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன். இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததில்லை. உனக்குச் சரியானவன் உனக்குப் பின் எழும்புவதுமில்லை என்றார் (3:12). அன்பானவர்களே தாழ்மைப் படுங்கள் ; பெருமை வேண்டாம். நிதானித்துப் பார்த்து உணர்வு ள்ளவர்களாய் ஞானமாய் நடந்து கொள்வோம். பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும் புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன் (நீதி 2:8) என்று தேவன் சொல்கிறார். நம் இருதயத்திற்குள்ளிருந்து புறப்பட்டு வந்து நம்மைத் தீட்டுப்படுத்தும் பெருமையும், மதிகேட்டையும் நம்மை விட்டு அகற்றிப்போட்டு பரிசுத்தமாய் வாழ்வோம் (மத் 7:20,21). உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லா பொய் வழிகளையும் வெறுக்கிறேன் என்ற தாவீதின் வழியை பிடித்துக் கொள்வோம்.

இப்பொழுது தேவனற்ற சாபமான, பாவமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பாவி தன்னைத்தான் நிதானித்துப் பார்த்ததால் தேவ ஜனமாகும் உன்னத வாய்ப்பைப் பெற்ற வரலாற்றை கவனிப்போம். அவன்பெயர் சகேயு (லூ 19:1–10). தேவன் பாவிகளை நேசிப்பது மட்டுமல்ல (யோவான் 3:16),இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் கூட்டிக் தருகிறார் (I தீமோ 2:4)

இப்பொழுதோ எங்கும் உள்ள மனுஷருக்கெல்லாம் கட்டளையிடு கிறார் (அப் 17:30) வாய்ப்புகள் நம்மைத் தேடிவரும்பொழுது விட்டு விடலாமா?

இயேசு தான் வாழும் எரிகோவுக்கு வந்தார் என்று கேள்விப்பட்ட சகேயு அவரைக்காண உடனே புறப்பட்டு விட்டான். ஆனால், குள்ளமான அவன் சரீரமும், இயேசுவைச் சுற்றிய கூட்டமும் அவனுக்கு தடையாயிருந்தது. ஆனாலும் தளராமல் இயேசுவைப் பார்க்கும்படி வகைதேடி கௌரவத்தையும் பாராமல் மரத்தின்மேல் ஏறி இயேசுவைப் பார்த்தான். அன்பானவர்களே, இயேசுவைக் காண்பதில் (அறிவதில்) சுற்றுச்சூழல், சுய கௌரவம் உறவுகள் தடையாயிருக்க ஒரு போதும் இடம் கொடாதீர்கள். அனுதின வேத வாசிப்பு, ஜெபம், சபை கூடுதல் இவற்றில் தடைகளைத் தவிர்த்தெறிந்து விடுங்கள். ஆவிக்குரிய வாழ்க்கையில் உற்சாகமாயிருங்கள். தன்னைத்தேடி வந்த சகேயுவை இயேசு தேடிவந்தார், சகேயுவை அழைத்தார் உடனே அவன் கீழ்ப்படிந்தான், ஆம் ,வருத்தப்பட்டு பாரம் சுமக்கிற வர்களே என்னிடத்தில் வாருங்கள் என்ற இயேசுவின் வார்த்தைக்கு உங்களை உடனே ஒப்புக்கொடுங்கள். காலதாமதம் ஆசீர்வாதங் களை இழக்கச்செய்யும். பரிசுத்தராகிய இயேசுவோடு நடந்த பாவி சகேயு நின்றான். இருதயம் உடைந்தது. தன்னைத்தானே நிதானித்துப் பார்த்தான். தான் பாவி என்று உணர்ந்தான் மனந்திரும்பி இயேசுவிடம் அறிக்கையிட்டான். உடனே இயேசு இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமின் குமாரன் என்று தேவ ஜனத்தோடு இணைந்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றான் (9) யோசித்துப் பாருங்கள் இயேசு மனந்திரும்ப சகேயுவை கட்டாயப்படுத்திவில்லை சுயமாய் நின்று நிதானித்துப்பார்த்ததால் தேவஜனமாகும் வாய்ப்பை பெற்றான். அன்பானவர்களே, நாம் தேவ ஜனம்தான். ஆனாலும் இந்த கரடுமுரடான வாழ்க்கையில் நிதான த்தை இழந்தவிடக்கூடாது. அனுதினமும் நம் வாழ்கையை இயேசு வின் வார்த்தைகளோடு (வேதத்தோடு) ஒப்பிட்டு சோதித் தறிந்து பரிசுத்த வாழ்க்கையை தக்கவைத்துக் கொள்ள வேண்டும், முடிவு பரியந்தம் நிலைத்து நிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத் 10:22).

இதே வாய்ப்பை யூதாவின் எல்லைகளில் வாழ்ந்த ஒரு பணக்கார வாலிபனுக்கும் கிடைத்தது. ஆனால் அவன் தன்னைத் தான் நிதானிக்கத் தவறியதால் பரிதாபமாக நித்திய ஜீவனை இழந்து துக்கத்தோடே திரும்பி போனான் (மாற் 10:17-27). ஆனால், சகேயுவுக்குக் கிடைத்த அத்துணை வாய்ப்பும் இவனுக்கு கிடைத்ததும் ஓடிவந்தான். பணக்காரன், வாலிபன், ஆனால் கௌரவம் பாராமல் இயேசுவுக்கு முன் தாழ்ந்தி மண்டியிட்டான். இயேசுவின் அருகில் வந்ததால் தன்னைத்தான் நிதானித்து பார்த்து இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன? என்றான் (மத் 19:20) குறைவு சுட்டிக் காட்டப்பட்டது. நிதானித்துப் பார்க்கத் தெரிந்த வனுக்கு குறைவை நிவர்த்திசெய்ய இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படியத் தெரியவில்லை.

கீழ்ப்படிய மறுப்பதால் எல்லாவற்றையும் இழந்த போவார்கள் என்பது தான் வேதனைக்குரியதாகும். இன்று அநேகர் பக்திக்குரிய வாழ்க்கை வாழ்வதாக தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அப்படி அல்லாமல் வேதம் சுட்டிக் காட்டும் பொழுது உடனே நிதானித்துப் பார்த்துக் கீழ்ப்படிந்தால் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம்.

நிறைவாக நின்றுநிதானித்து தேவனுக்குப் பிரியமான முடிவெடுப்போம். வாய்ப்புகள் எப்பொழுதும் நம்மைத் தேடிவந்து கொண்டுதான் இருக்கிறது.

1. ஆதாமுக்கு நீஎங்கேயிருக்கிறாய்? என்ற தேவவார்த்தை நிதானித்து திரும்பி வர வாய்ப்பை கொடுத்தது.(ஆதி 3:9)
2. காயீனுக்கு, நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? என்ற தேவவார்த்தை செய்யவேண்டியதை நிதானித்துப் பார்த்து செய்ய வாய்ப்பளித்தது.(ஆதி 4:7)
2. 12ல் ஒரு சீஷனாகிய யூதாஸ்க்கு இயேசுவின் வார்த்தைகள் அநேக வாய்ப்புகளைக் கொடுத்தது. குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்தேனே என்று புலம்பத்தெரிந்தவனுக்கு, அந்தகுற்றமில்லாத இயேசுவின் இரத்தம் என் பாவங்களையும் கழுவ வல்லமையுடையது என்று நிதானித்துப் பார்க்கத் தவறிவிட்டான்.

இப்பஜ இவர்கள் வார்த்தையோடு (வசனத்தோடு) ஒப்பிட்டு நிதானித்துப் பார்க்கத்தவறியதால் எல்லாவற்றையும் இழந்து போனார்கள். ஆனால் இந்த இருவருடைய வாழ்க்கையை கவனியுங்கள் :

1. தன்னை 3 முறை மறுதலித்த பேதுருவை இயேசு திரும்பிப் பார்த்தார். இயேசுவின் வார்த்தைகளால் உள்ளம் குத்தப்பட்டது. மனங்கசந்து அழுதான். நிதானித்துப் பார்த்த அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது.(மத் 27:75) மீண்டும் இயேசுவோடு சேர்த்துக் கொள்ளப்பட்டான்(யோவா 21).
2. கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வனை இயேசுவின் வார்ர்தைகள் தொட்டன. நான் நியாயப்படி தண்டிக்கப்படுகிறேன் என்ற உணர்வைத் தூண்டியது. நிதானித்தான், இயேசுவிடம் அடியேனை நினைத்தருளும் என்றான். அன்றே அவன் இயேசுவோடு இருக்கும் வாய்ப்பைப் பெற்றான். அன்பானவர்களே ! மேற்கண்ட இந்த குழுக்களோடு உங்களை ஒப்பிட்டு, நிதானித்து நலமானதை, நிலையானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். புத்தாண்டுக்குள் புதுப்பொலிவுடன் பிரவேசியுங்கள். ஆமென் !! ✝

# தேவன் (God)

*ஆதி. 1:1; சங். 100 : 3; யோவா. 1:1-3; 1கொரி. 8: 5 - 6; கொலோ . 1 : 16.*
*சகோ. ஓ. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார் - சென்னை*

## முன்னுரை:

1. ஒருவர் தேவனாக அதாவது கடவுளாக இருந்தால் அவருக்கு முக்கியமாக ஒரு வல்லமை இருக்கவேண்டும், அது, அவர் சிருஷ்டிகராக இருக்கவேண்டும், ஆதி. 1:1.

2. சிருஷ்டிக்கும் வல்லமையில்லாத ஒருவரை கடவுளாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் படைக்கும் வல்லமையில்லாத ஒருவர் யாரோ படைத்தவைகளுக்கு கடவுளாக உரிமை கொண்டாட முடியாது.

3. ஏனென்றால் நாம் உண்மையான கடவுளை அறிந்துகொள்ளாவிட்டால் நம்மால் நித்தியஜீவன் பெறமுடியாது. சிருஷ்டிகர்களாகிய பிதாவாகிய தேவனையும் அவருடைய குமாரரான இயேசுகிறிஸ்துவையும் அறிந்துகொள்வதே நித்தியஜீவன் ஆகும், யோவா. 17:3.

4. நாம் உண்மையான தேவனை அறிந்துகொள்ள வில்லை யானால், நம்மால் அவருடைய நித்தியமான திட்டங்களை அறிந்து கொண்டு, அவரோடு ஐக்கியம் கொண்டு, என்றென்றுமாக அவரோடு நித்தியத்தில் வாழமுடியாது.

5. ஆகவே, அப்போஸ்தலனாகிய பவுல், தேவனைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க வேண்டும், அவர் நமக்கு தூரமானவர் இல்லை என்கிறார், அப். 17 : 24 – 29.

### 1. பரிசுத்த வேதத்தில் ஆதி. 1 :1 ன்படி ஒருவர் தேவனாய் அதாவது பொதுவான கூற்றுப்படி கடவுளாய் இருந்தால் அவர் கண்டிப்பாக சிருஷ்டிகராய் இருக்கவேண்டும்.

A. தேவன் என்பவர் வல்லமையுள்ளவராக மட்டும் இருப்பது போதாது; அவர் எல்லாவற்றிற்கும் சிருஷ்டிகராகவும், காரணராகவும், அவைகளை நடத்துபவராகவும் இருக்கவேண்டும், எபி. 1:3 ; 3 : 4.

B. அதன்படி, தேவன் வானங்களையும் பூமியையும் பூமியிலுள்ள சகலத்தையும் மனிதர்களாகிய நம்மையும் படைத்தார், ஆதி. 2 : 1, 7, 21 – 22. இதில் மனிதர்களாகிய நம்மை மட்டும் அவருடைய சாயலின்படியும் ரூபத்தின்படியும் சிருஷ்டித்தார், ஆதி. 1 : 26 – 27.

C. இங்கே நாம் ஒருகாரியத்தை உறுதியாக கவனிக்கவேண்டும்; மனிதர்களாகிய நாம் கடவுளை உண்டாக்கவில்லை, தேவன்தான் நம்மை உண்டாக்கினார், சங். 100 : 3. ஆகையால் மனிதர்கள் உண்டாக்கின கடவுள்கள், கடவுள்கள் அல்ல.

D. தேவன் என்பவர் மனிதனுடைய கண்களால் காணமுடியாதவராக காணக்கூடாதவராக இருக்கிறார், யோவா. 5:37; 1தீமோ. 6 : 16.

E. மனிதர்களாகிய நம்மால் அவரை காணமுடியாவிட்டாலும், அவரையும், அவருடைய நித்தியம், வல்லமை, தெய்வீகம் (தேவத்துவம்) போன்றவைகளை நாம் அறிந்து கொள்ளும்படி செய்திருக்கிறார், ரோம. 1:19 – 20.

1. எப்படியென்றால் காணப்படுகிற ஆகாயம், நிலம், நீர், காற்று, நெருப்பு அல்லது ஒளி மற்றும் அவைகளின் வல்லமைகளை நாம் காணும்போது, இவைகளை படைத்தவர் ஒருவர் உண்டு என்பதை அவைகள் நமக்கு சொல்லிக்கொண்டே இருக்கின்றன, சங்.19:1–4.

F. மனிதர்களுடைய கண்டுபிடிப்புகளும், ஆராய்ச்சிகளும் இவைகளைப் படைத்த ஒருவர் இருக்கிறார் என்பதை வலியுறுத்துகின்றன. ஆகவே தேவன் அதாவது கடவுள் இல்லை என்று மனிதன் சொல்லக்கூடாது, சங். 14:1–3; 53:1–3.

1. மனிதன் வானத்தின் எல்லையைக் கண்டுபிடிக்கவில்லை; எவ்வளவு பெரிய அல்லது சக்திவாய்ந்த தொலைநோக்கியைக் (Telescope) கண்டுபிடித்தாலும் அதையும் தாண்டி புதிய நட்சத்திரங்கள் மற்றும் கோள்கள் இருப்பதை மனிதன் காண்கிறான், இதுவரை எல்லையைக் காணவில்லை , பிரச. 3:11.

2. ஒரு சிறிய அளவு யுரேனியம், ஜப்பானில் இரண்டு பெரிய நகரங்களை அழித்தது; அவ்வளவு பெரிய சக்தியை தேவனால் ஒரு சிறிய அளவு பொருளுக்குள்ளாக வைக்கமுடியுமென்றால், தேவன் எவ்வளவு வல்லமை வாய்ந்தவராக இருக்கிறார் என்பதை நாம் அறியமுடியும். தேவன் படைத்த சக்திகளை நாம் நன்மைகளுக்காகவும் பயன்படுத்தமுடியும்.

3. தேவனுக்கு நம்மைப்போல பூமிக்குரிய சரீரம் இருக்குமானால் அவரால் எப்படி 'ரியனையும் மற்றும் பெரிய வல்லமைகளையும் உண்டாக்கி கட்டுப்படுத்தமுடியும்.

II. *சிருஷ்டிகராகிய தேவன், அவருக்கே உரிய பிரத்தியோகத் தன்மைகளைக் கொண்டுள்ளார் ஆகவே யாரும் கடவுளாக அவரோடு போட்டிபோடவே முடியாது.*

A. அவர் ஆரம்பமும் முடிவும் இல்லாத நித்தியமான ஆவியா யிருக்கிறார், யோவா. 4 : 24 ; சங். 90 : 1 – 2 ; வெளி. 1 : 8 ; மல். 3 : 6. தேவன் ஆவியாயிருந்தாலும் அவரால் பார்க்க முடியும், பேசமுடியும், நம் ஜெபங்களைக் கேட்கமுடியும், 1பேது. 3 : 12 ; யாத். 20 : 1 ; எண். 12:2 ; 1இராஜா. 17 : 22 ; சங். 28 : 6 ; 66 : 19.

B. அவர் தெய்வீகமானவராய் இருக்கிறார், ரோம. 1 : 20; கொலோ. 2:9 ; 1இராஜா. 18: 39 ; எரே. 10 : 10.

C. அவர் எல்லையில்லாத வல்லைமையுள்ளவராய் இருக்கிறார், ஆதி. 28:3 ; வெளி. 11:17 ; 21 : 22.

D. அவர் நீதி மற்றும் பரிசுத்தமுள்ளவராய் இருக்கிறார், ஏசா. 43 : 15 ; 45 : 21 ; சங். 119 : 137 ; 1பேது. 1:15–16 ;

E. அவர் காலங்களையும் நேரங்களையும் படைத்தவராகையால்; அவர் காலங்களுக்கும் நேரங்களுக்கும் முன்பு இருக்கிறார் மேலும் அவரே அவைகளை கட்டுப்படுத்துகிறார், ஏசா. 43 : 10, 13.

F. அவர் தமது எல்லா சிருஷ்டிப்புகளையும் தமது வல்லைமையுள்ள சட்டங்களினால் படைத்து, நடத்துகிறார் அல்லது நிர்வகிக்கிறார், சங். 148:5–6 ; எபி. 1:3 ; சங். 33 : 6, 9.

G. அவர் எப்பொழுதும் உறங்காதவராகவும் தூங்காதவராகவும் இருக்கிறார், சங். 121 : 4.

H. அவர் பொய் சொல்லமாட்டார், தம்முடைய வாக்குத்தத்தத்தை மாற்றிக்கொள்ள மாட்டார்; ஆகையால் நாம் எப்பொழுதும் தேவனை நம்பலாம், எண். 23 : 19 ; தீத். 1:3 ; எபி. 6 ; 17–18.

**III. ஆவியாயிருக்கிற தேவன் சகலத்தையும் வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு சிருஷ்டித்தார்; இந்த நம்முடைய சிருஷ்டிகர்களைக் காணப்படுகிற வஸ்துக்கள் ஆக்குவது வணங்குவது அவர்களை அவமானப்படுத்துவது ஆகும், யோவா. 1 : 1 - 3; 1கொரி. 8 : 5 - 6 ; கொலோசெயர் 1:16.**

A. ஆகையால் இவ்வளவு வல்லமை, நித்தியம், தெய்வீகம், பரிசுத்தம், நீதி நிறைந்த தேவனை காணப்படுகிற பொருளாக உருவாக்குவது, அவைகளுக்குச் சமமாக நினைப்பது, அவைகளை வணங்குவது தேவனை அவமானப்படுத்துவது ஆகும், அப். 17 : 29 ; ரோம. 1 : 21 – 25 ; வெளி. 9: 20.

B. இயேசுகிறிஸ்துவை உருவமாக அல்லது சிலையாக, படமாக, ஓவியமாக வணங்குவதை சிலர் நியாப்படுத்துகிறார்கள்; ஆனால் அதுவும் விக்கிரக ஆராதனையே, அவர் இப்பொழுது எந்த ரூபத்தில் இருப்பார் என்று யாராலும் சொல்ல முடியாது, 1யோவா. 3 : 2.

C. மனிதர்களாகிய மரியாளை, அப்போஸ்தலர்களை, பரிசுத்தவான்களை வணங்குவது விக்கிரக ஆராதனை ஆகும், ரோம. 1 : 23. இப்படிச் செய்வது சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவிப்பதாகும், ரோம. 1 : 25, 28.

D. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் ... என்றார், யாத். 20 : 4– 5. ஆனால் மக்கள் இன்றைக்கும் இந்த சட்டத்தை மீறுகிறார்கள், அது மிகப்பெரிய பாவம்.

E. தேவனுடைய பிள்ளைகள், புறஜாதிகளைப்போல விக்கிரக ஆராதனையாகிய சிலை வழிபாடு செய்யக்கூடாது என்று தேவன் உறுதியாக பழைய, புதிய ஏற்பாடுகளில் கட்டளையிட்டார், 1யோவா. 5 : 21 ; 2கொரி. 6:16 ; சங். 115 :3 – 8 ; ஏசா. 44:9–20.

1. பழைய ஏற்பாட்டு மக்கள் விக்கிரக ஆராதனை செய்ததற்காக அவர்களை புறஜாதிகளிடத்தில் அடிமைகளாக விற்றுப்போட்டார், நியா. 10 : 6–16.

2. தேவனை விட்டு, விக்கிரக ஆராதனை செய்ததினால், ஆபிரகாம் விட்டு புறப்பட்டுவந்த பூர்வீகமான கல்தேய தேசத்திற்கே யூதர்கள் அடிமைகளாகப் போனார்கள், அதி. 15:7 ; யோசு. 23 : 3; 2நாளா. 36 : 14–20 ; நெகே. 9:7.

F. சிலையைச் செய்பவர்களும் அதை வணங்குபவர்களும் மடையர்கள் என்று ரோமன் கத்தோலிக்க வேதாகமத்தில், ஞானஆகமம் அதிகாரங்கள் 13–15 சொல்லுகிறது.

1. இயேசுவை, சிலையாக அல்லது படமாக வைத்து வணங்கலாம்; சிலுவையிலிருந்து அவரை இறக்கினபோது அவரது முகத்தைத் துடைத்த துணியில் அவரது முகம் இரத்தத்தால் பதிந்தது; அதைக்கொண்டு அவர் முகம் வரையப்பட்டது என்றெல்லாம் சொல்லப்படும் கட்டுக்கதைகளை நம்பக்கூடாது.

2. அதேபோல கிறிஸ்துவானவர் அறையப்பட்ட சிலுவையின் ஒருதுண்டு என்று ஒரு சிறிய கட்டையை காண்பிப்பார்கள். உலகெங்கும் அவர்கள் ஆலயங்களில் உள்ள அந்தக் கட்டைத் துண்டுகளை சேகரித்தால் பல சிலுவைகள் செய்யலாம் ஆகையால் அதுவும் ஒரு கட்டுக்கதை.

3. இயேசுவின் தாயாகிய மரியாளை வணங்கலாம் என்பதும், அவர் மூலமாக ஜெபிக்கலாம் என்பதும் தேவனுடைய திட்டத்திற்குப் புறம்பான விஷயம். இயேசுகிறிஸ்து ஒருவரே பிரதான ஆசாரியர் அவர்மூலம் மட்டுமே தேவனிடம் சேரவேண்டும், எபி. 7 : 25–26.

4. மரியாள் உயிரோடு எழுந்திருக்கவில்லை , இன்னும் பரதீசில் இருப்பார், வேத ஆதாரங்களின்படி அவர் முதல் நூற்றாண்டு சபையில் ஒரு விசுவாசியாக இருந்தார் என்று நம்பலாம், அப். 1:14.

5. மேலும் மரியாள் சிருஷ்டிகர் அல்ல தேவனால் கிறிஸ்துவைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்டவர். இயேசு ஆரம்பமும் முடிவும் இல்லாதவர், யோவா. 17 : 5 ; வெளி. 1:8 ; ஏசா. 43 : 10.

*முடிவுரை :*

1. தேவன் நம்முடைய சிருஷ்டிகராக இருந்தும், நாம் அவரிடத்தில் அன்பு கூறவில்லை ; அவர்தான் நம்மிடத்தில் முதலாவது அன்பு கூர்ந்து, நாம் பாவ மன்னிப்புபெற தம் குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார், 1யோவா. 4 : 10.

2. ஆகையால் நாம், நம் சிருஷ்டிகராகிய தேவனை மதித்து, கனப்படுத்தி, அவரை மாத்திரமே தொழுதுகொள்ளவேண்டும். விக்கிரகங்களை நம்மைவிட்டும் நம் இல்லங்களைவிட்டும் அகற்ற வேண்டும்.

3. தேவன் மாத்திரமே நம்மேல் அன்புசெலுத்தி, நமக்கு மீட்பு, இரட்சிப்பு, பரிசுத்தம், நீதி, நித்தியஜீவன், பரமவாழ்க்கை போன்ற நன்மைகளைத் தரமுடியும். ஏனென்றால் அவர்தான் பரலோகத்தைப் படைத்தார்.

4. தேவனைவிட அவர் படைத்த ஆகாயம், பூமி, காற்று, தண்ணீ ர், நெருப்பு, ’ரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நிலம், வீடு, வாகனம், பணம், மண், மரம், உலோகம், மனிதர், தேவதூதர் போன்றவற்றை உயர்வாக நினைப்பது வணங்குவது விக்கிரகஆராதனை ஆகும். அவர்கள் தண்டனையில் பங்கடைவார்கள், வெளி. 21:8.

5. பிதாக்களின் காலத்தில் பலிபீடம் கட்டி பலியிட்டு, கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி, அவரைத்தொழுதுகொண்டார்கள், ஆதி. 8 : 20 ; 12 : 8 ; 21 : 33 ; 26 : 25.

6. மோசேயின்மூலம் பழைய ஏற்பாடு கொடுக்கப்பட்டபோது, ஆரம்பத்தில் கூடாரமும் அதன்முன்பு பலிபீடமும்; அதன்பின்பு எருசலேமில் கட்டிட தேவாலயமும் அதன்முன்பு பலிபீடமும் இருந்து அதனடிப்படையில் ஆராதனைகள் மிருக பலிகள் செலுத்தி மனிதபிரதான ஆசாரியனைக்கொண்டு நடந்துவந்தது.

7. கிறிஸ்துவின் சிலுவைக்குப்பிறகு புதிய ஏற்பாட்டின் இந்தகாலத்தில் ஆவியோடும் உண்மையோடும் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனை ஆராதிக்க வேண்டும், யோவா. 4 : 24 ; கொலோ. 3 : 17. இந்த காலத்தில் கட்டிடங்கள் ஆலயங்கள் அல்ல, நாமே ஆலயம், 1கொரி. 3:16–17.

8. தேவனை ஒரு கட்டிடத்திற்குள் அல்லது கட்டிடத்தில் உள்ள ஒரு அறைக்குள் வைத்து பூட்டி, நம் கட்டுப்பாட்டில் கடவுளை வைக்கலாம் என்று மனிதன் நினைப்பது மனிதனுடைய அறிவீனம் அல்லது பெலவீனமான நம்பிக்கை ஆகும், அப். 7 : 48 ; 17:24.

9. ஆகையால், நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனை சத்தியத்தின்மூலம் தேடி, அவருடைய திட்டங்களை அறிந்துகொண்டு, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவரின் குமாரருடைய சபையாகிய ராஜ்யத்திலே வாழ்ந்து, பரமவாழ்வைப்பெற திட்டமிடுவது சரியானது, யோவா. 1:18 ; மத். 16 : 26.

10. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்று தேவன் பொறுமையாயிருக்கிற இந்த காலத்தை நாம் நம்முடைய இரட்சிப்பின் காலமாக எண்ணி ஒரு நல்ல முடிவை எடுப்போம், 2பேது. 3:7–14 ; 2கொரி. 6:1–2. ஆமென்.

✝

# நாளும் நடப்பும்

1. கேரளாவில் மீண்டும் பறவைக் காய்ச்சல்
2. மோட்டார் வாகனச் சாற்று, ஓட்டுநர் உரிமம் புதிப்பிக்க டிசம்பர் 31 வரை நீட்டிப்பு.
3. 1971 போரில் பாகிஸ்தானை வெற்றி கண்ட பொன்விழா டிசம்பர் 16–12–71 ல் கடைபிடிக்கப்பட்டது.
4. வெளிமாநில விமானப் பயணிகள் தமிழகத்துக்குள் வர பதிவு கட்டாயம்.
5. பெண்ணின் திருமண வயதை 21 ஆக உயர்த்தும் மசோதா தாக்கல்.

Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 12 டிசம்பர் - 2021

தனிப்பிரதி
ரூ.10/-

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month


# எங்களது இதர வெளியீடுகள்





















சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.





## ஆசானின் அறிவுரையிலே ...



| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| வாரத்தின் முதல் நாள் | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 20 |
| சகோதர சிநேகம் நிலைத்... | 22 |
| தன்னைத்தானே நிதானித்துப் ... | 25 |
| தேவன் | 29 |



- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.


– ஆசிரியர்.


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.













# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026

